உங்கள் அபிமான தினதமிழ் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 08.05.2026 • மலர் 04 • இதழ்: 128
• Edition : Nagercoil • 08.05.2026 • Vol : 04 • Issue : 128 • Page : 4 • Rs. 5/-

# அசாம் புதிய அரசு 12ம் தேதி பதவியேற்பு

## பிரதமர் மோடி பங்கேற்பு

கவுகாத்தி, மே. 8

அசாம் மாநில சட்டசபை தேர்தலில் பாஜக தொடர்ந்து 3வது முறையாக ஆட்சியை கைப்பற்றியது. 126 தொகுதிகளை கொண்ட அசாம் சட்டசபை தேர்தலில் பாஜக கூட்டணி 102 இடங்களில் வெற்றி பெற்றது. பாஜக மட்டும் 82 இடங்களை கைப்பற்றியது. அங்கு பாஜக ஹாட்ரிக் வெற்றியை பெற்று முத்திரை பதித்தது.



அசாம் முதல்மந்திரி ஹிமந்தபிஸ்வா சர்மா மற்றும் மாநில மந்திரிகள் நேற்று தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர். புதிய அரசு வருகிற 11ம் தேதி பதவியேற்கும் என்று தகவல் வெளியாகி இருந்தது.

இந்தநிலையில் அசாமில் பாஜக தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணியின் புதிய அரசு வருகிற 12ம் தேதி பதவி ஏற்கும் என்று மாநில தலைமை செயலாளர் ரவிக்கோடா தெரிவித்துள்ளார்.

அசாம் முதல்மந்திரியாக ஹிமந்தபிஸ்வ சர்மா தொடர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் மோடி, மத்திய மந்திரிகள், பாஜக ஆளும் முதல்மந்திரிகள், துணை முதல்மந்திரிகள் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தமிழ்நாடு முழுவதும்

## காங்கிரஸ் கட்சி சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்: செல்வப்பெருந்தகை தகவல்

சென்னை, மே. 8

தமிழக காங்கிரஸ் தலைவர் செலவப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படும் மத்திய பாஜகவை கண்டித்தும், அவர்களின் கைப்பாவையாக செயல்படும் கவர்னரை கண்டித்தும் மாவட்ட தலைநகரங்களில் இன்று (08.05.2026) வெள்ளிக்கிழமை காலை 11:00 மணிக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



அத்துடன் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பாக அண்ணா சாலை, தாராப்பூர் டவர் அருகில் இன்று (08.05.2026) காலை 11:00 மணியளவில் எனது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய மந்திரிகள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள், மூத்த காங்கிரஸ் நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் காங்கிரஸ் உறுப்பினர்கள், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், சர்க்கிள், வட்ட தலைவர்கள் மற்றும் அதன் நிர்வாகிகள், பெருநகரசென்னை மாமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள், முன்னணி அமைப்புகள், துறைகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள் அதன் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பார்கள்.

நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்த புகைப்படங்கள் மற்றும் பத்திரிக்கை செய்திகளை tamilnadu.congress@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசியலில் அதிரடி நிகழ்வு: கவர்னரை சந்திக்கிறார் எடப்பாடி பழனிசாமி

சென்னை, மே. 8

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றியது. தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்துள்ள நிலையில், தற்போதுள்ள தவெகவின் பலம் 112 ஆக உள்ளது. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், 2 நாட்கள் ஆகியும் இன்னும் தவெக கட்சி ஆட்சி அமைக்க முடியவில்லை.

முன்னதாக, தவெக தலைவர் விஜய், கவர்னர் அர்லேகரை சந்தித்தார். அப்போது தங்களை ஆட்சி அமைக்க அழைக்கக் கோரி கவர்னரிடம் கடிதம் வழங்கினார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு விஜய்க்கு இல்லாததால், அவரை ஆட்சியமைக்க வரும்படி கவர்னர் அழைக்கவில்லை.

இந்த பரபரப்பான சூழலில், தவெக தலைவர் விஜய் மீண்டும் கவர்னரை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தங்களை ஆட்சியமைக்க அழைக்க வேண்டும் என கவர்னரிடம் விஜய் கோரிக்கை வைத்தார். முதல்அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிப்பேன் எனவும் கவர்னரிடம் விஜய் மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக கூறப்பட்டது. கவர்னர் விஜய் இடையேயான சந்திப்பு சுமார் 40 நிமிடங்கள் நீடித்தது.

113 எம்எல்ஏக்களை வைத்து எப்படி ஆட்சி அமைப்பீர்கள்? வேறு எந்த கட்சி தவெக அரசை ஆதரிக்கும்? பதவி ஏற்ற பிறகு பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் என்று எப்படி நம்புகிறீர்கள்? உங்களிடம் இருக்கும் எம்எல்ஏக்களை வைத்து நிலையான அரசை அமைக்க முடியுமா?

118 எம்எல்ஏக்கள் ஆதரவை இருப்பதை காட்டுங்கள், அவ்வாறு நிரூபித்தால் மட்டுமே பதவி பிரமாணம் செய்துவைக்க முடியும். பெரும்பான்மை கிடைத்துவிடும் எனும் யூகத்தின் அடிப்படையில் செயல்பட முடியுமா?' என்று விஜயிடம் தமிழக கவர்னர் அர்லேக்கர் கேள்விகளை எழுப்பினார்.

அப்போது அவரிடம், விதிமுறைகளின்படி தன்னை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும் என்று விஜய் மீண்டும் வலியுறுத்தினார்.

பெரும்பான்மையை எப்படி நிரூபிப்பீர்கள் என்ற கவர்னரின் கேள்விகளுக்கு விஜய் நேரடியாக பதில் அளிக்க முடியவில்லை. அவர் அளித்த விளக்கத்தில் கவர்னருக்கு திருப்தி இல்லை என்று கூறப்படுகிறது.

இதனால், ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பது, பதவிப்பிரமாணம் செய்து வைப்பது பற்றி கவர்னர் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. இதனால் தவெக ஆட்சி அமைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது.

இந்தநிலையில், அரசியல் அதிரடி நிகழ்வாக, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை 4 மணிக்கு கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்திக்கிறார். அடுத்தபடியாக, ஸ்டாலினுக்கும் கவர்னர் அழைப்பு விடுத்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தவெக ஆட்சி அமைக்க விஜயிடம் பெரும்பான்மை இல்லை என ஆளுநர் கூறியுள்ள நிலையில் இந்த சந்திப்பு நடைபெற இருக்கிறது. தமிழக அரசியல் நிகழ்வு நொடிக்கு நொடி மாறிக் கொண்டே இருக்கிறது. அதிமுக கூட்டணி 53 இடங்களில் கைப்பற்றி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## திமுகவும், அதிமுகவும் இணைந்து அரசியல் செய்வது சரியானதல்ல

### டிகேஎஸ் இளங்கோவன் பேச்சு

சென்னை, மே .8

திமுக செய்தி தொடர்பாளர் டிகேஎஸ் இளங்கோவன் கூறியதாவது: தற்போதைய அரசியல் சூழல் சிக்கலான நிலைதான். திமுகவும், அதிமுகவும் இணைந்து அரசியல் செய்வது சரியானதல்ல, அதிமுகவுக்கு, திமுக ஆதரவு என எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டியது தவெகவின் பொறுப்பு. விசிக, கம்யூ. கட்சிகள் திமுக கூட்டணியில் தொடர வேண்டும் என்பது எங்கள் விருப்பம்" என்று கூறினார்.



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக அதிக இடங்களில் வெற்றி பெற்றாலும் 118 என்ற மேஜிக் நம்பரை எட்ட முடியவில்லை இந்த சூழலில் திமுகவும், அதிமுகவும் இணைந்து ஆட்சி அமைக்கப் போவதாக தகவல் பரவியது. இந்தத் தகவலை திமுக தரப்பு உடனடியாக மறுத்துவிட்டது. அதேசமயம், அதிமுக மறுக்கவில்லை. நேற்று செய்தியாளர்களிடம் பேசிய செம்மலை, "எதுவாக இருந்தாலும் எடப்பாடி பழனிசாமி நல்ல முடிவை, தீர்க்கமான முடிவை எடுப்பார். எடப்பாடி பழனிசாமி 'கிங் மேக்கர்' அல்ல, அவரே 'கிங்'" என கூறியிருந்தார்.

அரசியலில் இரு துருவங்களாக உள்ள இந்த இரு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைக்கப் போவதாகப் பரவிய தகவல், உண்மையான முயற்சிகளை அறிந்து வெளியானதா அல்லது யூகங்களாக பரவியதா, வதந்தியாக பரப்பப்பட்டதா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. இந்த பரபரப்புக்கு நடுவே நேற்று மாலை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழக கவர்னரை நேற்று மாலை சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## மக்களவையில் 6ல் ஒரு பங்கு பா.ஜ.க. எம்.பி.க்கள் வாக்கு திருட்டு மூலம் வெற்றி பெற்றவர்கள்: ராகுல்காந்தி கடும் தாக்கு

புதுடெல்லி, மே. 8

பா.ஜ.க. மீது வாக்கு திருட்டு குற்றச்சாட்டை தொடர்ந்து கூறி வரும் காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி,

நாடாளுமன்ற மக்களவையில் வெற்றி பெற்ற பா.ஜ.க. எம்.பி.க்களில் 6ல் ஒரு பங்கு பேர் வாக்குத்திருட்டு மூலம் வெற்றி பெற்றதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

வாக்கு திருட்டு மூலம் சில நேரங்களில் தனிநபர்களின் இடங்களும் திருடப்படுகின்றன.

மறுபுறம் ஒரு ஒட்டு மொத்த அரசும் திருடப்படுகிறது.

நாடாளுமன்ற பா.ஜ.க. எம்.பி.க்கள் 240 பேரில் ஒவ்வொரு 6வது எம்.பி.யும் வாக்கு திருட்டு மூலமே வெற்றி பெற்றிருக்கிறார்.



அவர்களை அடையாளம் காண்பது கடினமல்ல. பா.ஜ.க.வின் கூற்றுப்படி சொல்வதானால், அவர்களை 'ஊடுருவல் காரர்கள்' என்று முத்திரை குத்தலாமா? அரியானாவின் நிலை என்ன? அங்கே, ஒட்டு மொத்த அரசே ஒரு ஊடுருவல்காரர்தான். மக்களவைக்கு நேர்மையாக தேர்தல் நடந்திருந்தால் 140 இடங்கள் கூட அந்த கட்சி வெற்றி பெற்றிருக்காது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 'த.வெ.க.வுக்கு ஆதரவு அளிப்பது குறித்து அவசர கதியில் முடிவெடுக்க முடியாது' திருமாவளவன்

சென்னை, மே. 8

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றியது. த.வெ.க.வுக்கு காங்கிரஸ் கட்சியின் 5 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு கொடுத்திருந்தாலும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் த.வெ.க.வுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.

முன்னதாக, த.வெ.க. தலைவர் விஜய், நேற்று மாலை தமிழக பொறுப்பு கவர்னர் அர்லேகரை சந்தித்தார். அப்போது தங்களை ஆட்சி அமைக்க அழைக்கக் கோரி கவர்னரிடம் கடிதம் வழங்கினார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் விஜய்க்கு இல்லாததால், அவரை ஆட்சியமைக்க வரும்படி கவர்னர் அழைக்கவில்லை.

இதனிடையே தி.மு.க. கூட்டணியில் உள்ள வி.சி.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் த.வெ.க.வுக்கு ஆதரவு அளிக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் த.வெ.க. தலைவர் விஜய் தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆதரவு கேட்டார் என வி.சி.க. தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.



இது தொடர்பாக தந்தி டி.வி.க்கு அவர் அளித்த பிரத்யேக பேட்டியில், "த.வெ.க. தலைவர் விஜய் தொலைபேசியில் பேசி என்னிடம் ஆதரவு கேட்டார். அமைச்சரவையில் இடம் வழங்குவது குறித்து விஜய் பேசவில்லை. விஜய் நேரில் சந்தித்து ஆதரவு கேட்க வேண்டுமென நான் எதிர்பார்க்கவில்லை. எங்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, த.வெ.க. ஆதரவு குறித்த முடிவை எடுப்போம். ஆதரவளிப்பதில் அவசரகதியில் முடிவெடுக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

# புதிய பெயர் பலகை திறப்பு விழா



திருப்பூர்: மே08

திருப்பூர் மாநகராட்சி 25 வது வார்டு பகுதிக்கு உட்பட்ட சோளி பாளையம் பாட்டையப்பன் நகர் பகுதி பெயர் பலகை திறப்பு விழா நடைபெற்றது. அதிக பனியன் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியில் பொதுமக்கள் வந்து செல்லும் வழிகள் தெரியாமல் சிலர் பெயர் பலகை வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இதனை உடனடியாக காந்திநகர் ரோட்டரி சங்கத் தலைவர் திருப்பூர் மாவட்ட ரோட்டரி நிர்வாகிகள் மணிமாறன். கிளைச் செயலாளர் நடராஜ். சோளி பாளையம் குடியிருப்பு ஒருங்கிணைப்பாளர்கள். ஜெகநாதன். மணி. மந்தராசலம். சேகர். குருமூர்த்தி. பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கினர் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா சிக்னல் பகுதியில்

# வெயிலில் தவிக்கும் வாகன ஓட்டிகள் பசுமை பந்தல் அமைக்கப்படுமா?

ஈரோடு மே 8

ஈரோட்டில் கடந்த சில நாட்களாகவே கோடை வெயில் சுட்டெரிக்கிறது. அதிகபட்சமாக 106 டிகிரி வெயில் கொளுத்தியது. இப்போது அக்னி வெயில் கொளுத்துவதால் வெயிலின் தாக்கம் போக போக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சிக்னல் பகுதியில் நிற்கும் போது இரு சக்கர வாகனங்களில் செல்வோர் சாலையை கடப்பவர்கள் வெயிலில் தவிக்கும் நிலை ஏற்படுகிறது. இதையடுத்து ஈரோடு கலெக்டர் அலுவலகம் சிக்னல் சூரம்பட்டி நால் ரோடு சிக்னல் போன்ற இடங்களில் பசுமை பந்தல் அமைக்கப்பட்டு உள்ளது. இதனால் இரு சக்கர வாகன ஓட்டிகள் பச்சை சிக்னல் விழும் வரை பசுமை பந்தலில் நிழலில் நின்று செல்கிறார்கள். இதேபோல் ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா சிக்னலிலும் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க இரு சக்கர வாகனங்களில் செல்பவர்களுக்காக பசுமை பந்தல் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர். மேலும் ஈரோடு மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் பசுமை பந்தல் அமைக்க வேண்டும் என்று இரு சக்கர வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### அகஸ்தீஸ்வரம் முத்தாரம்மன் திருக்கோவில்

# சித்திரை திருவிழா ஊஞ்சல் உற்சவம் திரளான பக்தர்கள் பங்கேற்பு



தென்தாமரை குளம், மே. 08

அகஸ்தீஸ்வரம் முத்தாரம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழாவில் நடைபெற்ற ஊஞ்சல் உற்சவத்தில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

அகஸ்தீஸ்வரம் இந்து நாடார் சமுதாய வகை குலசேகர விநாயகர் அறநிலையத்திற்குட்பட்ட தேவி முத்தாரம்மன் திருக்கோயிலில் சித்திரைத் திருவிழா 26ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா தொடர்ந்து 11 நாட்கள் நடைபெற்றது.

11 வது நாளான நேற்று முன்தினம் 6 ம் தேதி காலை 6 மணிக்கு உதய கால பூஜை, 8மணிக்கு காலசந்திபூஜையும் 8.30 மணிக்கு பெண்கள் முளைப்பாரி ஏந்தி ஊர்வலம் வருதல்,, 9 மணிக்கு வில்லிசை, நண்பகல் 12 மணிக்கு பூக்கொடை, பிற்பகல் 2 மணிக்கு தேவி முத்தாரம்மன் பூத வாகனத்தில் எழுந்தருளி ஊர்வலம் வருதல், இரவு 10 மணிக்கு தேவி முத்தாரம்மன் ஊஞ்சல் உற்சவம், இரவு 11 மணிக்கு திருக்கொடி இறக்குதல் மற்றும் தீபாராதனையும் அதனைத் தொடர்ந்து சமபந்தி விருந்தும் நடைபெற்றது .

விழா நாட்களில் தினமும் அலங்கார தீபாராதனை, பஜனை, அன்னதானம்,

நாடகம், பல்சுவை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம், திரைப்பட மெல்லிசை நிகழ்சி, சமபந்தி விருந்து, வாகன பவனி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

விழா ஏற்பாடுகளை ஆலய அறங்காவலர் குழுவினர் கே. எஸ்.மணி, பேராசிரியர் எஸ். கருணாகரன், ராஜ சுந்தரபாண்டியன், சீனிவாசன், கோகுலகிருஷ்ணன், பொருளாளர் சுயம் புலிங்கம், கணக்கர் ராஜசேகர் ஆகியோர் செய்திருந்தனர்.

### குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# கை குழந்தையின் தங்க அரைஞான் கொடி திருட்டு: பெண் ஊழியர் கைது

நாகர்கோவில், மே.8

குருந்தன்கோடு அருகே உள்ள கட்டி மாங்கோடு பகுதி சேர்ந்தவர் ஹர்சன் தாஸ் மனைவி டெல்பின் அமலா (24). இவர் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டிப்ளமோ நர்சிங் படித்துள்ளார். டிப்ளமோ தேர்வு எழுதி மதிப்பெண் குறைவாக கிடைத்ததாக தெரிகிறது. இதனால் தனது தேர்வு தாளை மறுத்திருத்தம் செய்ய டெல்பின் அமலா முடிவு செய்தார். அதற்காக கடந்த தினம் தேர்வுக்கு பணம் கட்ட வேண்டி தனது கை குழந்தையுடன் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்றார்.

அப்போது கழிப்பறைக்கு செல்வதற்காக டெல்பின் அமலா தனது குழந்தையை அங்கு மகளிர் பாதுகாவலரான கோட்டார் சாஸ்தான் குளக்கரை பகுதி சேர்ந்த மீரா (30) என்பவரிடம் குழந்தையை கொடுத்துவிட்டு சென்றார். பின்னர் வந்து குழந்தையை பெற்றுக் கொண்டார். டெல்பின் அவரது வீட்டில் சென்று குழந்தையின் இடுப்பு பகுதியை பார்த்த போது இடுப்பில் கிடந்த 8 கிராம் தங்க அரைஞாண் கொடியை காணவில்லை. இதனால் அவர் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றி வரும் பெண் தான் அதை திருடி இருப்பார் என சந்தேகம் அடைந்துள்ளார். இது குறித்து ஆசாரிப்பள்ளம் போலீசில் புகார் செய்யப்பட்டது. புகாரின் பேரில் போலீசார் வழக்கு செய்து மீராவை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்பை கவர்னர் மாற்றி எழுத நினைப்பது மாபெரும் தவறு

## ஜோதிமணி தகவல்



சென்னை, மே. 8

காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

கவர்னர் அதிகாரத்தை யாரும் கேள்வி கேட்க முடியாது என்றால் 108 இடங்களில் வெற்றிபெற்றுள்ள தனிப்பெரும் கட்சியான தமிழக வெற்றிக் கழகத்தை ஆட்சியமைக்க அழைக்காமல் ஒரு இடத்தில் வெற்றிபெற்றுள்ள பாஜகவை, கவர்னர் ஆட்சியமைக்க அழைக்க முடியுமா?

திமுக ஆட்சியில் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநருக்கு வரம்பற்ற அதிகாரம் எதுவும் கிடையாது. அவர் அரசியல் சாசனத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர் என்று உச்சநீதிமன்றம் பலமுறை தெளிவாகக் கூறியுள்ளது.

த.வெ.கவின் தலைவர் விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரியிருக்கிறார். அவர் கூட்டணி என்று கடிதம் கொடுத்தாலும் , த.வெ.க தனிப்பெரும் கட்சி தான். தனிப்பெரும் கட்சியின் தலைவரை கவர்னர் ஆட்சி அமைக்க அழைப்பது தான் சரியானது. மோடி, அமித்ஷா அவர்களின் அழுத்தத்திற்குப் பணிந்து தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்பை மாற்றி எழுத நினைப்பது மாபெரும் தவறு. இதை தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் ஏற்கமாட்டார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தவெக தலைவர் பதவியேற்க காலதாமதமின்றி அனுமதிக்க வேண்டும்

## சிபிஐ(எம்) வலியுறுத்தல்




சென்னை, மே. 8

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றியது. தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்துள்ள நிலையில், தற்போதுள்ள தவெகவின் பலம் 112 ஆக உள்ளது. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் தவெகவுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.

முன்னதாக, தவெக தலைவர் விஜய், நேற்று மாலை கவர்னர் அர்லேகரை சந்தித்தார். அப்போது தங்களை ஆட்சி அமைக்க அழைக்கக் கோரி கவர்னரிடம் கடிதம் வழங்கினார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் விஜய்க்கு இல்லாததால், அவரை ஆட்சியமைக்க வரும்படி கவர்னர் அழைக்கவில்லை.

இந்தநிலையில், இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கோ அல்லது கூட்டணிக்கோ ஆட்சி அமைக்கும் வகையில் தமிழக மக்கள் தீர்ப்பு வழங்கவில்லை. இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்திற்கு 108 சட்டமன்ற உறுப்பினர்களை வழங்கி த.வெ.க.வை தனிப்பெரும் கட்சியாக தமிழக மக்கள் தேர்வு செய்துள்ளனர். தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் த.வெ.க தலைவர் சி. ஜோசப் விஜய் மட்டுமே ஆட்சி அமைக்க உரிமை கோரியிருக்கிறார்.

கவர்னர் மூலம் அரசியல் சாசனத்திற்கு விரோதமாக நடந்து கொள்வது, தனது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வது என்ற அணுகுமுறையை பாஜக கடைபிடித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே தமிழ்நாடு கவர்னர் அவரை பதவியேற்க அழைக்காமல் காலம் கடத்தி வருகிறார். இது ஏற்புடையதல்ல.

எனவே, வேறு யாரும் ஆட்சி அமைக்க உரிமை கோராத நிலையில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ள தமிழக வெற்றிக் கழக தலைவர் சி.ஜோசப் விஜய்யை தமிழக கவர்னர் உடனடியாக பதவியேற்க அழைப்பு விடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆபரேஷன் சிந்தூர் ஓராண்டு நடவடிக்கை: இந்திய ராணுவத்தை நினைவு கூர்ந்து போற்றுவோம்

## நயினார் நாகேந்திரன் பேச்சு

சென்னை, மே. 8

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது: பஹல்காமில் அப்பாவி இந்தியர்களை மதத்தின் பெயரால் கொடூரமாகக் கொலை செய்த பயங்கரவாதிகளுக்கு நமது இந்திய இராணுவத்தினர் கொடுத்த தக்க பதிலடியான ஆபரேஷன் சிந்தூர் நடைபெற்று இன்றோடு ஓராண்டாகிறது. பயங்கரவாதத்தால் தனது திலகத்தை இழந்த ஒவ்வொரு பாரத மகளுக்கும் நமது பாரதப் பிரதமர் நரேந்திரமோடி அளித்த வாக்குறுதியை நிலைநாட்டும் விதமாக, பயங்கரவாதத்தின் வேரை அழிக்க பாகிஸ்தானின் உள்ளேயே சென்று தீவிரவாத முகாம்களைத் தகர்த்தெறிந்த நமது இந்திய ராணுவத்தை நினைவு கூர்ந்து போற்றுவோம்! தீவிரவாதத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் எதிரான நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான நமது பாரத தேசத்தின் உறுதிக்குத் தலைவணங்குவோம்! இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



### காவேரிப்பட்டிணத்தில்

# தவெக -காங்கிரஸ் கட்சியும் இணைந்து தமிழகத்தில் ஆட்சி அமைக்க உள்ளதைடுத்து தவெக கட்சியினர் காங்கிரஸ் கடசியினர் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடினார்கள்

காவேரிப்பட்டிணம், மே 8

தமிழகத்தில் கடத்த 4ம் தேதி நடைப்பெற்ற வாக்கு எண்ணிக்கை முடிவில் தமிழக வெற்றிக் கழகம் தனி மெசாரிட்டியுடன் 108 இடங்களில் வெற்றிப்பெற்றது, இதனை அடுத்து தமிழகத்தில் ஆட்சி அமைக்க காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை தெரிவித்துள்ளதை அடுத்து தமிழகம் முழுவதும் உள்ள தவெக கட்சியினர் பட்டாசு வெடித்தும் பொது இனிப்புகள் வழங்கியும் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இத்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணத்தில் உள்ள தவெக கட்சியினர் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் கட்சி தலைவரும், மிட்டஹள்ளி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினருமான எல், சுப்பிரமணியனை நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து தங்களது வாழ்த்தினை தெரிவித்தனர் இதனைத் தொடர்ந்து காவேரிப்பட்டினம் பேருத்து நிலையம் அருகில் முள்ளாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் எல் சுப்பிரமணியன் முன்னிலையில் தவெக கட்சியினர் தமிழகத்தில் தவெக கட்சி தலைவர் விஜய் முதல்வராக பதவி ஏற்க காங்கிரஸ் கட்சி தனது ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பட்டாசு வெடித்தும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாகக் கொண்டாடினார்கள் அப்போது காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியை சேர்ந்த தவெக கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.

### இருவழிபாதை பணிகள் நிறைவு

# மதுரை-புனலூர் எக்ஸ்பிரஸ் ரயிலை வேளாங்கண்ணி வரை நீட்டிக்க கோரிக்கை

நாகர்கோவில், மே.8

மதுரை நாகர்கோவில் வழியாக புனலூர் செல்லும் பயணிகள் ரயிலை வேளாங்கண்ணி வரை நீட்டித்து இயக்க வேண்டும் என்று குமரி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வேளாங்கண்ணிக்கு பல்வேறு வழித்தடங்களில் ரயில்கள் இயக்கப்படும் நிலையில், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட பயணிகளுக்கு நேரடி ரயில் வசதி இல்லாததால் பெரும் அவதி ஏற்பட்டுள்ளது. குறைந்தபட்சம் திருவனந்தபுரம் வேளாங்கண்ணி சிறப்பு ரயிலையாவது நாகர்கோவில் திருநெல்வேலி வழியாக இயக்கியிருக்கலாம் என்று பயணிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

மதுரையிலிருந்து நாகர்கோவில் வழியாக புனலூர் செல்லும் இந்த ரயில், 410 கி.மீ. தூரம் மட்டுமே பயணிக்கிறது. எக்ஸ்பிரஸ் ரயிலாக மாறியதால் கட்டணம் உயர்ந்து பயணிகள் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. எனவே, இந்த ரயிலின் வேகத்தை அதிகரித்து, திருச்சி வழியாக வேளாங்கண்ணி வரை நீட்டித்து இயக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீட்டிக்கப்பட்டால் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், வேளாங்கண்ணி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பயனடைவர். இதனால் ரயில்வேக்கு கூடுதல் வருவாயும் கிடைக்கும். தற்போது இரணியல் முதல் தஞ்சாவூர் வரையிலான பகுதிகளில் இருவழி பாதை பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளன. இதனால் கிராசிங் தேவை இல்லாமல் ரயிலை வேகமாக இயக்க முடியும்.

திருவனந்தபுரம், கொல்லம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ சமூகத்தினர் வேளாங்கண்ணி மாதா கோவிலுக்கு அதிக அளவில் செல்கின்றனர். அதே போல், முஸ்லிம் பக்தர்கள் நாகூர், முத்துப்பேட்டை, காரைக்கால் தர்காக்களுக்கும், இந்து பக்தர்கள் திருநள்ளாறு சனி பகவான் ஆலயம் உள்ளிட்ட நவகிரகத் தலங்களுக்கும் செல்ல நேரடி ரயில் வசதி இல்லாதது பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

இந்த நிலையில் குமரி, நெல்லை மாவட்டங்களிலிருந்து திருச்சி செல்லும் தற்போதைய ரயில்கள் பெரும்பாலும் நள்ளிரவு நேரத்தில் இயக்கப்படுவதால் பயணிகளுக்கு சிரமம் ஏற்படுகிறது. இருவழிபாதை பணிகள் நிறைவடைந்துள்ளதால், மதுரைபுனலூர் எக்ஸ்பிரஸ் ரயிலை வேளாங்கண்ணி அல்லது காரைக்கால் வரை நீட்டித்து, திருச்சிக்கு வசதியான நேரத்தில் ரயில் இயக்க வேண்டும் என்றும் பயணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

### மார்த்தாண்டம் அருகே

# சொத்து பிரச்சனையால் தாய் மகன் மீது தாக்குதல்

மார்த்தாண்டம், மே. 8

மார்த்தாண்டம் பகுதியைச் சேர்ந்தவர் லைசா (60). இவரது மகன் ஜெகதீஷ் (35) கூறி தொழிலாளி. இவர்களுக்கும் அதே பகுதியை சேர்ந்த மெல்பின் ஜோஸ், சுஜின் மார்ஷல் மற்றும் சிபு என்கிற 3 பேருக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது.

இந்த நிலையில் சம்பவ தினம் லைசா வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த மெல்பின், மார்ஷல் மற்றும் சிபு ஆகி ஆகிய மூன்று பேரும் சேர்ந்து லைசாவை சரமாரியாக தாக்கி உள்ளனர். இதை தட்டிக் கேட்க வந்த ஜெகதீசையும் கீழக்கிடந்த கல்லை எடுத்து சரமாரியாக தாக்கி, கொலை மிரட்டல் விடுத்து 3 பேரும் தப்பி சென்று உள்ளனர். இதில் படுகாயம் அடைந்த லைசா , ஜெகதீஷ் ஆகியோரை அக்கம் பக்கத்தினர் மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இது குறித்த புகாரின் பேரில் மார்த்தாண்டம் போலீசார் சம்பந்தப்பட்ட மெல்வின் ஜோஸ், சுஜின் மார்ஷல் மற்றும் சிபு ஆகிய மூன்று பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஆன்லைனில் முதலீடு செய்தால் அதிக லாபம் என கூறி வாலிபரிடம் ரூ.20.80 லட்சம் மோசடி

சிவகங்கை, மே. 8

சிவகங்கைமாவட்டம் தேவகோட்டை ராம்நகர் பகுதியை சேர்ந்தவர் சிங்கம்துரை (35 வயது). கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இவரது செல்போன் வாட்ஸ்அப் எண்ணுக்கு ஆன்லைனில் முதலீடு செய்தால் கூடுதல் லாபம் பெறலாம் என்று விளம்பரம் ஒன்று வந்துள்ளது. அந்த விளம்பரத்தை பார்த்து அதில் தொடர்பு கொண்டார்.

பின்னர் அதில் உள்ள ஒரு குழுவில் சிங்கம்துரை இணைந்தார். இதை தொடர்ந்து டிசம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரை உள்ள காலகட்டத்தில் 87 தவணைகளில் ரூ.20 லட்சத்து 80 ஆயிரத்தை அவர் செலுத்தியதாக கூறப்படுகிறது.

அதன் பின்னர் விளம்பரத்தார் லாபத் தொகையை கொடுக்காமல் மேலும் பணம் செலுத்தும்படி கூறினார்களாம். இதனால் சந்தேகம் அடைந்த சிங்கம்துரை இதுகுறித்து சிவகங்கை சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது மக்களின் ஆணையை அவமதிப்பதாகும் கமல் ஹாசன்



சென்னை, மே. 8

மக்கள் நீதி மையம் கட்சி தலைவரும், நடிகருமான கமல் ஹாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எந்தக் கட்சிக்கும் வழங்கவில்லை. இந்த முடிவு தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது.

என் சகோதரர் மு.க.ஸ்டாலின் 'மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம்; பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்று அறிவித்திருக்கிறார். அவரது அரசியல் முதிர்ச்சியை நான் மதிக்கிறேன்.

இப்போது அரசியலமைப்பு பொறுப்பில் இருப்பவர்களும் அதே கடமையை நிறைவேற்ற வேண்டும். இது கோரிக்கை அல்ல, அவர்களின் அரசியலமைப்புக் கடமைக்கான நினைவூட்டல்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும். 233 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு நேரும் அவமானம்; மக்களாட்சிக்கு ஏற்படும் சேதம்.

'பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல' என எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

நான் பேசிக்கொண்டிருப்பது கட்சி அரசியல் அல்ல. ஓர் இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் இது. தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்புக்கு மரியாதை கிடைத்தே ஆகவேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கோவை பார்க் கல்விக் குழுமத்தின் ஆண்டு விழா

கோவை மே:08

கோவை கணியூரில் அமைந்துள்ள பார்க் கல்விக் குழுமத்தின் பொறியியல் கல்லூரிகளின் இரண்டு நாள் கலை திருவிழாவான, ஆண்டு விழா ஜீரோ ஜி 2026 வெகு விமர்சையாக கொண்டாடியது.

இந்த கலைவிழாவில் 22 கல்லூரிகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் பல போட்டிகளில் பங்கெடுத்தனர்.30க்கும் மேலான போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டனகாலையில் துவங்கிய இத்திருவிழா மாணவர்களின் பல வகையான கலை நிகழ்ச்சிகள் மற்றும் செண்டை மேளம் வழியாக வளாகம் கலை கட்டியிருந்தது. முதல் நாளில் திரையுலகின் பாடகர்/இசையமைப்பாளர் நிவாஸ் கே பிரசன்னா மற்றும் நடிகர்/பாடகி மடோனா செபாஸ்டியன் தங்களது குரல் வளத்தால் மாணவர்களை உற்சாகப் படுத்தி மகிழ்ந்தார்கள். டாக்டர் அனுஷா ரவி சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தி, மாணவர்கள் உங்களுக்கானது

ஆகவே கொண்டாடி மகிழுங்கள் என்று வாழ்த்தினார்.

இந்த அற்புதமான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஜீரோ ஜி குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.



# பருத்தி இறக்குமதி வரியை நீக்கி ஜவுளித் தொழிலைப் பாதுகாக்க சிஐடிஐ வலியுறுத்தல்.

கோவை மே:08

இந்திய ஜவுளித் தொழில் கூட்டமைப்பு சுவிட்சர்லாந்தின் 'கொர்ஸி' மற்றும் சர்வதேச பருத்தி ஆலோசனைக் குழு கூட்டம் கோவையில் உள்ள சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பின் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய, சிஐடி ஐ தலைவர் அஸ்வின் 2030 ஆம் ஆண்டிற்குள் இந்திய ஜவுளித் துறையின் வர்த்தகத்தை 350 பில்லியன் டாலராகவும், ஏற்றுமதியை 100 பில்லியன் டாலராகவும் உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், தற்போது பருத்தி மீது விதிக்கப்பட்டுள்ள 11% இறக்குமதி வரி, இந்திய ஜவுளித் துறையின் போட்டித்திறனை உலக சந்தையில் கடுமையாகப் பாதித்து வருகிறது.

பருத்தி விவசாயிகள் மற்றும் ஆலைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்திய பருத்தி கழகம் (சிசிஐ) உலக சந்தை விலையை விட சற்று குறைவான விலையில் ஆலைகளுக்கு பருத்தியை வழங்க வேண்டும் என இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

மேலும் சீனா போன்ற நாடுகளில் உள்ளது போல, இந்தியாவிலும் ஆலைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய மூன்று மாத கால பருத்தியை கையிருப்பில் வைத்திருக்க அரசு சுமார் 1500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். சுமார் 10 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் இத்துறை, கடந்த நிதியாண்டில் ஏற்றுமதியில் 2.2 சதவீத சரிவைச் சந்தித்துள்ளது.உற்பத்தி செலவு அதிகரிப்பு மற்றும் பருத்தித் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் ஏற்றுமதி வருவாய் 35.79 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது.பாரதப் பிரதமரின் 5எஃப் தொலைநோக்குப் பார்வையை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமானால், தரமான பருத்தி உற்பத்தி,நிலையான விலைக் கொள்கை மற்றும் முறையான வரி விலக்கு ஆகிய அம்சங்களில் அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார்.




## தஞ்சாவூர்மாவட்டத்தில் உள்ள

# 8 சட்டபேரவை தொகுதிகளில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் வைப்பு

தஞ்சாவூர் மே 8

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டப்பேரவை தொகுதிகளிலும் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீண்டும் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டன

தஞ்சாவூர்மாவட்டத்தில் 3,958 மின்னணு வாக்குப் பதிவு இயந்திர ங்களும், 3,248 கட்டுப்பாட்டு கருவி களும் ,3,562 வாக்களித்ததை பார்ப்பதற்கான இயந்திரங்களும் உள்ளன. இவை கடந்த ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெற்ற சட்ட பேரவை தேர்தலில் பயன்படுத்தப்பட்டன. இதையடுத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் மே 4ஆம் தேதி எண்ண ப்பட்டன. தேர்தல் முடிவடைந்ததை தொடர்ந்து, இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கட்டுப்பாட்டு கருவிகள் வாக்களித் ததை பார்ப்பதற்கான இயந்திர ங்கள் ஆகியவை மீண்டும் மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் (மின்னணு வாக்குப் பதிவு இயந்திரக் கிடங்கில்) வைக்கப்பட்டன

மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில், அங்கீகரி க்கப்பட்ட அரசியல் கட்சிகள் முன்னிலையில் இந்த இயந்திரங் கள் வைக்கப்பட்டன



## தஞ்சாவூர்மாவட்டத்தில் உள்ள

# 8 சட்டபேரவை தொகுதிகளில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் வைப்பு

தஞ்சாவூர் மே 8

தஞ்சாவூர் காவிரி சிறப்புங்காடி அருகே உள்ள மாலை நேர காய்கறி அங்காடி முன் இடதுசாரிகள் பொது மேடை சார்பில் காரல் மார்க்ஸின் 208வது பிறந்தநாள் விழா நடைபெற்றது

இதனுடன் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜமீன், பண்ணை கொடுமைகளை ஒழித்து சுயமரியாதை பெற்றுத் தந்த வாட்டாக் குடி இரணியன், ஜாம்பவானோடை சிவராமன், ஆம்லாப்பட்டு ஆறுமுகம் ஆகிய தியாகிகளின் 76 வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இதில் உழைக்கும் மக்கள் விடுதலைக்காகவும், உழைப்பு சுரண்டலில் இருந்து மக்களை விடுவிக்கவும், போர் இல்லாத உலகத்தை படைத்திடவும், நாட்டின் செயல்படும் இடதுசாரிகள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். மக்கள் விடுதலைக்காக செயல் திட்டத்தை வகுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

மக்களை வர்ணாசிரம அடிப்படையில் ஜாதி, மத ரீதியாக பிளவுபடுத்தும் கார்ப்பரேட் காவி பாசிசத்திற்கு எதிராக ஜனநாயக சக்திகள், முற்போக்கு சக்திகளை அனைவரும் ஒன்று பட வேண்டும். ஒன்றிணைந்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என உறுதி ஏற்கப்பட்டது

நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ் ட் கட்சி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சேவையா தலைமை வகித்தார். மக்கள் அதிகாரம் மூத்த தலைவர் காளியப்பன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மூத்த தலைவர் வீர .மோகன், இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை. மதிவாணன், சி பி எம் எல் மக்கள் விடுதலை மாவட்ட செயற் குழு உறுப்பினர் ஜோதி வேல், விடுத லை சிறுத் தைகள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் தமிழ் முதல்வன், சி ஐ டி யு மாவட்ட துணை செயலர் அன்பு, தொழிலாளர் விடுதலை முன்னணி மாவட்ட செயலாளர் யோகராஜ், புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சாமிநாதன், நிர்வாகி பக்ருதீன், ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்பு சங்க நிர்வாகிகள் தனபால், சேகர், மாலை நேர காய்கறி அங்காடி நிர்வாகி பாலமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 74,197 வாக்குகள் வித்தியாசத்தில் 6 தொகுதிகளை கோட்டை விட்ட த.வெ.க.

தஞ்சாவூர் மே 8

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகுதிகளில் திமுக 5 இடங்களிலும், த. வே.க 2 இடங்க ளையும், திமுக கூட்டணி கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஒரு இடத்தையும் கைப்பற்றி யது. அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை

தஞ்சாவூர்மாவட்டத்தில் உள்ள 8 தொகுதிகளில் மொத்தம் 19 லட்சத் து 68,724 வாக்காளர்கள் உள்ளனர் இவர்களில் 15 லட்சத்தை 86 ஆயிரத்து887 வாக்களித்து உள்ளனர்.

இதில்7 லட்சத்து 42 ஆயிரத்து 722 ஆண் வாக்காளர்களும் ,8 லட்சத்து 44 ஆயிரத்து 81 பெண் வாக்காளர் களும், 3ம் பாலினத்தவர்கள் 84 பேரும் அடங்குவர். மொத்தம் 80.60 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 8 சட்டசபை தொகுதிகளில் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு 5 லட்சத்து 96 ஆயிரத்து 22 வாக்கு களும் ,த. வே.க.வுக்கு 5 லட்சத்து 21 ஆயிரத்து 825 வாக்குகளும், அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகளு க்கு 3 லட்சத்து 83 ஆயிரத்து 500 வாக்குகளும் கிடைத்தன.

திமுக கூட்டணிக்கும், தா.வே.கவுக்கும் கிடைத்த வாக்குகள் வித்தி யாசம் 74,197 வாக்குகள் மட்டுமே. இந்த வாக்குகள் வித்தியாசத்தில் தான் தமிழக வெற்றிக்கழகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 தொகுதி களை கோட்டை விட்டது குறிப்பிடத் தக்கது.



## புதுக்கடை அருகே

# தடையை மீறி கேரளாவுக்கு செல்ல முயன்ற 7 கனிமவள லாரிகள் மீது வழக்கு

## லாரிகள் பறிமுதல்

புதுக்கடை, மே.8

கன்னியாகுமரி மாவட்டம் வழியாக கேரளாவுக்கு அதிக அளவில் கனிம வளங்கள் கடத்தப்பட்டு வந்தது. இந்த கனிம வள லாரிகளால் சாலைகள் அனைத்தும் சேதமடைந்ததுடன், ஏராளம் விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்பு போன்றவை நடைபெற்று, பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் கடந்த மாதம் தேர்தல் நேரத்தில் தக்கலை பகுதியில் வைத்து கல்லூரி மாணவி ஒருவரை அவரது தந்தை பைக்கில் கொண்டு செல்லும்போது, கனிமவள லாரி மோதி மாணவி சம்பவ இடத்தில் உயிரிழந்தார். உயிரிழந்த விவகாரத்தில் இரவில் தக்கலையில் மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது.

இதை அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் எஸ் பி ஆகியோரின் உத்தரவின் பேரில் கன்னியாகுமரி மாவட்டம் வழியாக கேரளாவுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்லும் அனைத்து வாகனங்களும் தடை செய்யப்பட்டன. தடையை மீறும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

தற்போதுதேர்தல்முடிந்துள்ளநிலையில்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் வழியாக மீண்டும் கனிம வள லாரிகளில் கனிம வளங்கள் கடத்துவதாக புகார் எழுந்தது. இதையடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்படி மாவட்டம் முழுவதும் தீவிர வாகன சோதனை நடைபெற்று வருகிறது.

நேற்று புதுக்கடை பகுதி 4 வழிச்சாலையில் நடந்த வாகன சோதனையில் தடையை மீறி கேரளாவுக்கு செல்ல முயன்ற 7 லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டது. புதுக்கடை சப் இன்ஸ்பெக்டர் கார்த்தி அளித்த புகாரின் பேரில் லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் காளியக்கவிளை காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் போலீசார் வாகன சோதனையில் 2 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வாகன சோதனையானது மேலும் தீவிர படுத்தப்படும்என்றும்தடையைமீறும்கனரகவாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

## புதுக்கடை அருகே

# கல்லூரி மாணவியிடம் பழகி 13 பவுன் நகைகள் மோசடி; வாலிபர் மீது வழக்கு

புதுக்கடை, மே. 8

புதுக்கடை அருகே உள்ள முஞ்சிறை பகுதியை சேர்ந்தவர் வில்சன் என்பவரது மகள் வின்சி (20). இவர் மார்த்தாண்டத்திலுள்ள ஒரு தனியார் கல்லூரியில் பி ஏ 3ம் ஆண்டு படித்து வருகிறார். இவர் கல்லூரிக்கு செல்லும்போது மார்த்தாண்டம் அருகே கழுவந்திட்டை பகுதியைச்சேர்ந்த ஜெபிஷ்ராஜ்(30) என்பவரிடம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. ஜெபிஷ் வியாபாரம் செய்து வந்துள்ளார். பழக்கத்தின் இடையே மாணவியிடம் பல்வேறு ஆசை வார்த்தைகளை கூறி 13 பவுன் தங்க நகைகளை வாங்கி மோசடி செய்துள்ளார். பின்னர் மாணவிக்கு அந்த நகைகளை திருப்பி வழங்கவில்லை என்று தெரிகிறது. இது குறித்து மாணவி வின்சி புதுக்கடை போலீசில் புகார் செய்தார். புதுக்கடை போலீஸ் இன்ஸ்பெக்டர் மாடசாமி ஜெபிஷ் ராஜ் மீது வழக்கு பதிவு செய்து மேலும் விசாரித்து வருகின்றனர்.

## மணப்பாறை

# ஆடு மேய்க்க சென்ற முதியவர் கிணற்றில் விழுந்து பலி



திருச்சி, மே. 8

மணப்பாறை அருகே கே. உடையப்பட்டி கிராமத்தில் ஆடு மேய்க்கச் சென்ற முதியவர் முத்துசாமி அப்பகுதியில் உள்ள கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார். அவரது உடல் சடலமாக மிதந்த நிலையில், அப்பகுதி மக்கள் அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த மணப்பாறை தீயணைப்புத் துறையினர், உடலை மீட்டெடுத்து காவல் துறையிடம் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கரடு முரடான சாலை நோயாளிகள் அவதி



திருப்பூர் மாநகராட்சி ஒண்ணாவது மண்டலம் 11 வது வார்டு அனுப்பர்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் டாக்டர் ஆறுமுகம் ஆஸ்பத்திரி வீதியில் காங்கிரீட் ரோடு சல்லி பரப்பப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகிறது மேடு பள்ளமாக பாதை இருக்கிறது. இதனால் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் நோயாளிகள் வருவதற்கு மிகவும் சிரமப்படு கின்றனர் காண்ட்ராக்ட் எடுத்தவர்கள் இன்னும் ரோடு தரமாக போடவில்லை எனவே ஒப்பந்ததாரருக்கு இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து புதிய பாதை அமைக்க வேறு ஒப்பந்ததாரருக்கு கொடுத்து உடனடியாக பணிகள் செய்ய மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பொதுமக்கள் சார்பாக சிபிஎம் கட்சியினர் கேட்டு கேட்டுக்கொள்கின்றனர்

### மருங்காபுரி

# பைக் அரசுப் பேருந்து விபத்து: ஒருவர் பலி

மருங்காபுரி, மே. 8

மருங்காபுரி அருகே மல்லிகை பட்டியைச் சேர்ந்த தயானந்தன், நிர்மல், மனோகரன் ஆகிய மூவர் இருசக்கர வாகனத்தில் தளம்பட்டி அருகே சென்று கொண்டிருந்தனர். அப்போது, எதிரே வந்த அரசு பேருந்து மீது மோதி விபத்துக்குள்ளாகினர். இதில்மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி தயானந்தன் உயிரிழந்தார். நிர்மல், மனோகரன் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். உடற்கூராய்வுக்குப் பின் தயானந்தனின் உடலை உறவினர்களிடம் ஒப்படைத்த துவரங்குறிச்சி போலீசார், விபத்து குறித்து வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்

### திருச்சி மாவட்டத்திற்கு

# உள்ளூர் விடுமுறை.. கலெக்டர் அறிவிப்பு



திருச்சி, மே. 8

திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் திருக்கோயில் சித்திரை தேர் திருவிழா வரும் மே 14ஆம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி, அன்று மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில், மே 23ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும் என மாவட்ட ஆட்சியர் சரவணன் தெரிவித்துள்ளார்.

### திருச்சி

# ஜாதியின் பெயரைக் கூறி பாலியல் தொல்லை; ஒருவர் கைது

திருச்சி, மே. 8

திருச்சி ஸ்ரீரங்கத்தில், கொள்ளிடம் ஆற்றங்கரை சாலையில் செவ்வாய்க்கிழமை மாலை நடந்து சென்ற முத்துலட்சுமி (24) என்பவரை, மேலூரைச் சேர்ந்த நாகரத்தினம் (40) என்பவர் வழிமறித்து, அவரது ஜாதியைக் குறிப்பிட்டு பாலியல் தொல்லை கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இது குறித்து ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் முத்துலட்சுமி அளித்த புகாரின்பேரில்,போலீஸார்எஸ்.சி.,எஸ்.டி.சட்டத்தின் கீழ் வழக்குப்பதிந்து நாகரத்தினத்தை கைது செய்தனர்.

### திருச்சி சிறுமியிடம் சில்மிஷம்:

# ஜவுளிக்கடை உரிமையாளர் போக்சோவில் கைது

தூத்துக்குடி, மே. 8

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஜோதிநகர் முதல் தெருவைச் சேர்ந்தவர் சுரேஷ் (வயது 48). இவர் கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோவில் பின்புறம் ஜவுளிக்கடை நடத்தி வருகிறார். இந்த நிலையில், 17 வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருவரிடம் சுரேஷ் அநாகரிகமான முறையில் சில்மிஷத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமி தரப்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் குற்றம் உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, சுரேஷ் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்று ஜவுளிக்கடை உரிமையாளர் சுரேஷை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் கோவில்பட்டி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### வணிக எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு

# ஒன்றிய பாஜக அரசை கண்டித்து இடதுசாரிகள், விசிக ஆர்ப்பாட்டம்




நாகர்கோவில், மே. 8

வணிக எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை ஏற்படுத்திய ஒன்றிய பாஜக அரசின் செயல்பாட்டை கண்டித்து குமரி மாவட்ட இடதுசாரிகள் மற்றும் விசிக வினர் நாகர்கோவில் தலைமை தபால் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட செயலாளர் ஆர். செல்ல சுவாமி எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். சி பி ஐ மாவட்ட செயலாளர் டி.சுபாஷ் சந்திர போஸ், சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.அகமது உசேன், வி சி க மண்டல செயலாளர் பா.பகலவன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். சிபிஎம் மாவட்ட செயலாளர் ஆர் செல்ல சுவாமி பேசியதாவது,

ஒன்றிய பாஜக அரசானது, வணிகப் பயன்பாட்டிற்கான எரிவாயு விலையை, சிலிண்டருக்கு ரூ.1000 வரையிலும், 5 கிலோ சிலிண்டருக்கான விலையை 201 ரூபாயும் உயர்த்தியுள்ளது. கடந்த 120 நாட்களில் 1,518 ரூபாய் உயர்த்தியுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியன்று 1,739 ரூபாயாக இருந்த ஒரு சிலிண்டரின் விலை தற்போது 3,257 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு மக்களுக்கும் சிறு வணிகர்களுக்கும் கடுமையான சுமையாகும். ஏற்கெனவே, அந்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, வேலையின்மை மற்றும் வருவானப் பற்றாக்குறை ஆகியவற்றால் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர். தற்போது வணிக சமையல் எரிவாயு விலையை உயர்த்தியிருப்பது அப்பட்டமான கொள்ளையாகும்.

எனவே, அநியாயமான வணிக எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.அந்தோணி, எம் .அண்ணாதுரை, என். எஸ். கண்ணன், என். ரெஜீஸ்குமார், ஆர்.ரவி, எஸ். ஆர். சேகர், ஏ.நீலாம்பரன், நாகர்கோவில் மாநகர செயலாளர் எஸ்.அருணாசலம், விடுதலை சிறுத்தைகள் மண்டல செயலாளர் பகலவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் அம்மன்கோவில்பதி கிராமத்தில் ரேஷன்கடையில் பணியாட்கள் இல்லாத காரணத்தால் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் நபர்களுக்கே ரேஷன் பொருள் வழங்கயிருப்பதால் வேலைக்கு செல்லும் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் அதனால் தகுந்த அதிகாரிகள் பணியாட்களை அதிகபடுத்துமாறு அம்மன்கோவில்பதி கிராம பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது மேலும் ஒரு அட்டைக்கு குறைந்தபட்சம் 20 நிமிடம் ஆகிறது மிஷன் தராசு எல்லாம் பழுதடைந்து இருப்பதாக சொல்கின்றன அதையும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது

# களக்காடு தலையணைக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை



நெல்லை, மே. 8

நெல்லை மாவட்டம் களக்காடு பகுதியில் கடந்த 2 மாதங்களாக கோடை வெயில் கொளுத்தி வருகிறது. களக்காடு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலும் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் அங்குள்ள நீரூற்றுகள், நீர்நிலைகள் வேக மாக வறண்டு வருகின்றன. இதனால் களக்காட்டில் உள்ள தலையணை பகுதிக்கு தண்ணீர் வரத்து குறைந்தது.

எனவே களக்காடு புலிகள் காப்பக துணை இயக்குனர் சிசில் கில்பர்ட் உத்தரவின் பேரில், களக்காடு தலையணை நேற்று மூடப்பட்டது. சுற்றுலா பயணிகள் அங்கு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. நீர்வரத்து அதிகரித்த பிறகு மீண்டும் தலையணையில் குளிக்க அனுமதி அளிக்கப்படும் என்று வனச்சரகர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

# புளியம்பழம் பறித்தபோது மரத்தில் இருந்து தவறி விழுந்த பெண் உயிரிழப்பு

விழுப்புரம், மே. 8

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் அருகே கணக்கன்குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் சாமிக்கண்ணு. இவரது மனைவி வனசுந்தரி (61 வயது). இவர் தனது நிலத்தில் உள்ள மரத்தில் ஏறி புளியம்பழம் பறித்துக் கொண்டிருந்தார். அப்போது மரத்தில் இருந்து எதிர்பாராதவிதமாக அவர் தவறி கீழே விழுந்தார்.

இதில் தலையில் பலத்த காயமடைந்த வனசுந்தரியை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள், வனசுந்தரி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து வனசுந்தரியின் மகன் மணிகண்டன் கண்டாச்சிபுரம் போலீசில் புகார் செய்தார்.

புகாரின் பேரில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் காத்தமுத்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### தமிழக எல்லையில்

# காரில் கடத்தி வரப்பட்ட ரூ.2.27 கோடி ஹவாலா பணம் பறிமுதல்



நீலகிரி, மே. 8

கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் சுல்தான் பத்தேரியில் இருந்து கர்நாடக மாநிலம் குண்டல் பேட்டை வழியாக மைசூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கேரள, தமிழக எல்லையில் உள்ள முத்தங்கா சோதனைச்சாவடியில் காவல்துறை மற்றும் கலால்துறை போலீசார் நேற்று முன்தினம் வாகன சோதனை மேற்கொண்டனர். அப்போது அந்த வழியாக கர்நாடகாவில் இருந்து கேரளா நோக்கி ஒரு கார் வந்தது. அந்த காரை சோதனை செய்ய போலீசார் தடுத்து நிறுத்தினர். காரில் வந்த சுல்தான் பத்தேரி பகுதியைச் சேர்ந்த ஹர்ஷத் (44 வயது), கோழிக்கோடு மாவட்டம் கொடுவள்ளி பகுதியைச் சேர்ந்த இஸ்மாயில் (40 வயது) ஆகியோரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது இருவரும் முன்னுக்குப் பின் முரணாக பேசினர்.

இதனால் போலீசாருக்கு அவர்கள் மீது சந்தேகம் எழுந்தது. இதைத் தொடர்ந்து காரில் சோதனையிட்டனர். அப்போது காரின் உள்ளே பல இடங்களில் சிறிய அளவிலான ரகசிய அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் கட்டுக்கட்டாக 500 ரூபாய் பணம் இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து காரை முழுமையாக சோதனை செய்த போலீசார், காரில் இருந்த ரூ.2 கோடியே 27 லட்சத்து 43 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரை பறிமுதல் செய்த போலீசார், காரில் வந்த இருவரையும் கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், இவ்வளவு பெரிய தொகை எங்கிருந்து, யாருக்கு கொண்டு செல்லப்படுகிறது? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




### தருமபுரியில்

# இடதுசாரி கட்சிகள் மற்றும் விசிக கண்டன ஆர்ப்பாட்டம்

தருமபுரி மே 08

தருமபுரி மாவட்ட இடதுசாரி கட்சிகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மத்திய அரசயை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தருமபுரி பி எஸ் என் எல் அலுவலகம் அருகில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வணிக சிலிண்டர் விலை உயர்வை திரும்ப பெற வலியுறுத்தியும், ரயில்வே துறையில் ஆட் குறைப்பு செய்வதை கைவிடகோரியும் கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில்விடுதலைசிறுத்தை கட்சியின் தருமபுரி மைய மாவட்ட செயலாளர்த. கு . பாண்டியன், கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கலைச்செல்வன், சிசுபாலன் மற்றும் இடதுசாரி, விடுதலை சிறுத்தை கட்சிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# துறையூர் லோடு வேன் ஸ்டாண்டில் 5வேன்களில் பேட்டரிகள் திருட்டு காவல் நிலையத்தில் புகார்




திருச்சி, மே. 8

திருச்சி மாவட்டம் துறையூர் தெப்பக்குளம் பகுதியில் பாலக்கரை லோடு வேன் ஸ்டாண்ட் உள்ளது.

இங்கு நேற்று ஆறாம் தேதி இரவு 5 லோடு வேன்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இன்று காலை லோடுவேன் உரிமையாளர்கள் வந்து பார்த்தபோது ஐந்து வேன்களிலும்இருந்துபேட்டரிகள் திருடு போனது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பேட்டரிகள் ஒவ்வொன்றும் 12 ஆயிரம் ரூபாய் மதிப்பிலானதாகும் என வேன் உரிமையாளர்கள் தெரிவித்தனர். சத்யா என்பவரது இரண்டு வேன்கள் குமாரசாமி சவுந்தரராஜன் மணிவேல் ஆகியோரது வேன்கள் என மொத்தம் ஐந்து வேன்களில் பேட்டரிகள் திருடு போனது. இது குறித்து பாதிக்கப்பட்ட லோடுவேன் உரிமையாளர்கள் துறையூர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் ஓம்பிரகாஷிடம் புகார் மனு அளித்தனர்.

புகாரின் அடிப்படையில்அப்பகுதியில்உள்ள சிசிடிவி கேமராக்களை காவல்துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர். ஒரே இரவில் ஐந்து வாகனங்களில் பேட்டரிகள் திருடு போன சம்பவம் துறையூர் லோடு வேன் ஸ்டாண்ட் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.